‘நீட்’ தேர்வு ரத்து! மாநில பட்டியலில் கல்வி! 8-ஆம் வகுப்பு பொதுத் தேர்வு கூடாது போன்றவற்றை உள்ளடக்கிய

# மாநிலக் கல்விக் கொள்கை!

## முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் பரிந்துரைகளை வழங்கினார் நீதியரசர் த.முருகேசன்!

**சென்னை, ஜூலை 2 -**

**“ ‘நீட்’ தேர்வு ரத்து, மாநில பட்டி யலில் கல்வி, 8-ஆம் வகுப்பு பொதுத் தேர்வு ரத்து” என்பன போன்ற பரிந்துரைகளை உள்ளடக்கிய மாநிலக் கல்விக் கொள்கை அறிக்கையை முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களிடம் நீதியரசர் த.முருகேசன் தலைமையிலான குழுவினர் வழங்கினர்.**

ஒன்றிய பா.ஜ.க. அரசு, கடந்த 2020ம் ஆண்டு தேசிய புதிய கல்விக் கொள்கையை அறிவித்தது. கடும் எதிர்ப்புகளை மீறி இந்தியா முழுவதும் அக் கொள்கை படிப்படியாக அமல்படுத்தப்பட்டு வருகிறது. தேசிய கல்விக்கொள்கை வரைவு வெளியிட்ட போதே, எதிர்க்கட்சியாக இருந்த தி.மு.க. கடுமையாக எதிர்த்தது. மேலும், தேசியக் கல்விக்கொள்கை குலக் கல்வி முறையை ஊக்குவிக்கிறது எனவும் தி.மு.க. குற்றம்சாட்டியது.

பின்னர் தி.மு.க. ஆட்சிக்கு வந்ததும், தமிழ்நாட்டிற்கான மாநில கல்விக் கொள்கை உருவாக்கப்படும் என தமிழ்நாடு அரசு அறிவித்தது. இதற்காக ஓய்வு பெற்ற டெல்லி உயர்நீதிமன்ற நீதிபதி முருகேசன் தலைமையில் குழு அமைக்கப்பட்டது.

2022ம் ஆண்டு ஜூன் 1ம் தேதி அமைக்கப்பட்ட இக்குழு, கல்வியாளர்கள், பெற்றோர், சமூக ஆர்வலர்கள் என பலவேறு தரப்பினரிடம் இருந்தும், கல்வி நிறுவனங்களிடம் இருந்தும் ஆலோசனைகளைப் பெற்றது. தற்போது, இக்குழு தனது மாநில கல்விக் கொள்கை அறிக்கையை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் ஓய்வு பெற்ற நீதிபதி முருகேசன் வழங்கினார்.

இந்நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, குழுவின் உறுப்பினர்கள் - பேராசிரியர் இராம சீனுவாசன், எழுத்தாளர் எஸ்.இராமகிருஷ்ணன், பேராசிரியர் சுல்தான் அகமது இஸ்மாயில், முனைவர் அருணா ரத்னம், திருமதி.ஜெயஸ்ரீ தாமோதரன், துளசிதாசன், டி.எம்.கிருஷ்ணா, இரா. பாலு, முனைவர் ஃப்ரீடாஞானராணி, பேராசிரியர் பழனி, குழுவின் உறுப்பினர் செயலர் முனைவர் ஏ.கருப்பசாமி, பள்ளிக்கல்வித் துறை செயலாளர் ஜெ.குமரகுருபரன், பள்ளிக்கல்வித் துறை இயக்குநர் முனைவர் ச.கண்ணப்பன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

இருமொழிக் கொள்கையை கடைப்பிடிக்க வேண்டும், மூன்றாம் வகுப்பு மற்றும் ஐந்தாம் வகுப்புகளுக்கு தேர்வுகள் கூடாது, எட்டாம் வகுப்புக்கான பொதுத் தேர்வு ரத்து செய்யப்பட வேண்டும், கல்வி மாநில பட்டியலில் சேர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட அம்சங்கள் இந்த அறிக்கையில் இடம்பெற்றுள்ளன.

மேலும், நீட் தேர்வு கூடாது, +1 பொதுத்தேர்வு தொடர வேண்டும், கல்லூரிகளில் சேர்வதற்கு பிளஸ் 2 மதிப்பெண்களுடன் பிளஸ்1 மதிப்பெண்களையும் கணக்கில் கொள்ள வேண்டும்,

5 வயது பூர்த்தியாளர்கள் ஒன்றாம் வகுப்பில் சேரலாம், தமிழ்நாட்டில் மாநில பாடத்திட்டத்தின் படி தற்போது உள்ள நடைமுறையை தொடர வேண்டும் எனவும் இவ்வறிக்கை பரிந்துரை செய்துள்ளது.

கிராமப்புற மற்றும் பழங்குடியினர் பகுதிகளில் உள்ள குழந்தைகளுக்கு அதிக விளையாட்டு வசதிகள் மற்றும் முறையான பயிற்சிகளை வழங்க வேண்டும், மாவட்டம், மாநிலம் மற்றும் தேசிய அளவில் பயிற்சி முகாம்கள் மற்றும் விளையாட்டு தடகள நிகழ்வு களில் கலந்துகொள்ளும் மாணவர்களுக்கான நிதியுதவியை உறுதி செய்ய வேண்டும், இரு பெற்றோர்களையும் இழந்த மாணவர்களுக்கு உயர் கல்வியில் ஒரு சதவீதம் இட ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும் என்பன உள்ளிட்ட பரிந்துரைகளும் மாநில கல்விக் கொள்கை அறிக்கையில் இடம்பெற்றுள்ளன.

---

சி.பி.ஐ., அமலாக்கத்துறை போன்ற

# விசாரணை அமைப்புகளை தவறாகப் பயன்படுத்துவதா?

## கண்டித்து நாடாளுமன்ற வளாகத்தில் எதிர்க்கட்சிகள் ஆர்ப்பாட்டம்!

புதுடெல்லி, ஜூலை 2 –

3வது முறையாக பதவியேற்றுள்ள பிரதமர் மோடி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி அரசின் முதல் நாடாளுமன்ற கூட்டத்தொடர் கடந்த 24ந் தேதி தொடங்கியது தேதி தொடங்கியது. இதில் 27ந் தேதி நடந்த இரு அவைகளின் கூட்டுக்கூட்டத்தில் ஜனாதிபதி திரவுபதி முர்மு உரையாற்றினார்.

அதைத்தொடர்ந்து மறுநாளே ஜனாதிபதி உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீதான விவாதம் தொடங்குவதாக இருந்தது. ஆனால் நீட் தேர்வு முறைகேடு குறித்து முதலில் விவாதிக்க வேண்டும் என எதிர்க்கட்சிகள் போர்க்கொடி தூக்கின. இது தொடர்பாக ஒத்திவைப்பு தீர்மான நோட்டீசும் அளித்து இருந்தன.

மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா அவற்றை நிராகரித்ததுடன், ஜனாதிபதி உரை மீதான விவாதத்தின்போது எதிர்க்கட்சிகள் தங்கள் பிரச்சினை குறித்து பேசலாம் என தெரிவித்தார். ஆனால் இதை ஏற்காத எதிர்க்கட்சி எம்.பி.க்கள் கடும் அமளியில் ஈடுபட்டனர். இதனால் மக்களவை நாள் முழுவதும் ஒத்திவைக்கப்பட்டது. இதைப்போல மாநிலங்களவையிலும் எதிர்க்கட்சிகள் நீட் விவகாரத்தை முன்வைத்து அமளியில் ஈடுபட்டன. இதனால் அவை நடவடிக்கைகள் பெரும்பாலும் முடங்கின.

இந்தநிலையில் நாடாளுமன்ற வளாகத்தில் இந்தியா கூட்டணி எம்.பி.க்கள் எதிர்க்கட்சி தலைவர் ராகுல்காந்தி தலைமையில் போராட்டத்தில் ஈடுபட்டனர். விசாரணை அமைப்புகளை மத்திய அரசு தவறாக பயன்படுத்துவதாக கூறி முழக்கத்தில் ஈடுபட்டனர். மக்களவை, மாநிலங்களவை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

மேலும் அரசியல் ஆதாயத்துக்காக சிபிஐ, அமலாக்கத்துறை போன்ற அமைப்புகளை பயன்படுத்துவதாக குற்றச்சாட்டி உள்ளனர். முன்னதாக, நீட் தேர்வு முறைகேடு மற்றும் புதிய குற்றவியல் சட்டங்கள் நேற்று முதல் அமலுக்கு வந்தது குறித்து விவாதிக்க கோரி நோட்டீஸ் வழங்கப்பட்டு உள்ளது.




அவை தொடங்குமுன் நாடாளுமன்ற வளாகத்தில் இந்தியா கூட்டணி எம்.பி.க்கள் அனைவரும் ஆர்ப்பாட்டம் நடத்தினர். ராகுல்காந்தி தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில், நீட் உள்ளீட்ட போட்டித் தேர்வுகளில் முறைகேடுகள், வேலையில்லா திண்டாட்டம், விசாரணை அமைப்புகளை முறைகேடாகப் பயன்படுத்துதல் உள்ளிட்ட ஒன்றிய அரசின் எதேச்சதிகார போக்கை கண்டித்து எம்.பி.க்கள் முழக்கமிட்டனர்.

---

குடியரசுத் தலைவர் உரையில்

# தொலைநோக்குச் சிந்தனை இல்லை!

## கார்கே குற்றச்சாட்டு!

புதுடெல்லி, ஜூலை 2 -

“குடியரசுத் தலைவர் உரையில் தொலைநோக்கு சிந்தனை இல்லை” என்று மாநிலங்களவையில் மல்லிகார்ஜுன கார்கே குற்றஞ் சாட்டினார்.



ஜனாதிபதி திரவுபதி முர்மு உரைக்கு, நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தின் போது மாநிலங்களவையில், மல்லிகார்ஜுன கார்கே பேசியதாவது:-

ஜனாதிபதியின் உரை என்பது மிகவும் முக்கியமானது. ஜனாதிபதி திரவுபதி முர்முவை மதிக்கிறோம். இந்த ஆண்டு, நாடாளுமன்றத்தில் இரண்டு முறை ஜனாதிபதி திரவுபதி முர்மு உரையாற்றினார். முதல் முறை ஆற்றிய உரை தேர்தலுக்கானது.

ஜனாதிபதி உரையில், ஏழைகள், பட்டியல் இனத்தவர், சிறுபான்மையினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு சாதகமாக எந்த திட்டமும் உரையில் எதுவும் இடம் பெறவில்லை. ஜனாதிபதியின் உரையில் தொலைநோக்கு தொலைநோக்கு சிந்தனையோ, வழிகாட்டுதலோ இல்லை. கடந்த முறை போலவே, இந்த முறையும் மத்திய அரசை பாராட்டும் வார்த்தைகள் ஜனாதிபதி உரையில் அதிகம் இருந்தது.

இவ்வாறு அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

---

மதுரை தோப்பூர் அரசு காசநோய் மருத்துவமனையில்

தன்னலமற்ற தியாகத் தொண்டாற்றி - ஓய்வு பெற்றுள்ள

# டாக்டர் காந்திமதி நாதனுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

## தமது இல்லத்திற்கே அழைத்து நேரில் பாராட்டுத் தெரிவித்தார்!

சென்னை, ஜூலை 2-

மதுரை தோப்பூர் அரசு காசநோய் மருத்துவமனையில் நோயாளிகளை உறவினர்கள் போல் நேசித்து மருத்துவமனைக்கும், மருத்துவப் பணிகளுக்கும் பெருமைகள் தேடித்தந்து ஓய்வு பெற்றுள்ள டாக்டர் காந்திமதிநாதன் அவர்களை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், நேற்று (1.7.2024) இல்லத்திற்கே அழைத்து நேரில் பாராட்டி வாழ்த்துகள் தெரிவித்தார்.

மதுரை அருகே தோப்பூரில் 1960-ஆம் ஆண்டு பிப்ரவரி 12ஆம் தேதி அன்றைய முதலமைச்சர் பெருந்தலைவர் காமராஜர் அவர்களால் அரசு காசநோய் மற்றும் பிற தொற்று நோய்களுக்காக தனித்தன்மை வாய்ந்த நெஞ்சக நோய் மருத்துவமனை திறக்கப்பட்டது. 115 ஏக்கரில் பரந்து விரிந்த நிலப்பரப்பில் அமைந்துள்ள இந்த மருத்துவமனையில் காசநோயாளிகள் பிற தொற்று நோயாளிகள் நோய் முற்றிய நிலையில் வீட்டில் வைத்து பராமரிக்க முடியாத நிலையில் உறவினர்களால் கைவிடப்பட்டவர்கள் இந்த மருத்துவமனையில் கொண்டு வந்து விடப்படுவார்கள்.

2013-ஆம் ஆண்டின் இந்த மருத்துவமனையின் நிர்வாக அலுவலராக நியமிக்கப்பட்டவர் டாக்டர் காந்திமதிநாதன் அவர்கள். டாக்டர் காந்தி மதி நாதன் அவர்களின் தன்னலமற்ற தியாக மனப்பான்மையுடன் கூடிய மருத்துவத் தொண்டுகளால் இந்த மருத்துவமனை மிகச்சிறந்த மருத்துவமனையாக வளர்ந்துள்ளது.

எய்ம்ஸ் மருத்துவமனைக்கே இங்கு நிர்வாக அலுவலகம் அமையும் அளவுக்கு இந்த மருத்துவமனை உயர்ந்து சிறந்துள்ளது. இந்த மருத்துவமனை வளாகத்தில் நந்தவனம் போல் திரும்பிய பக்கம் எல்லாம் பசுமை புல்வெளிகள் சூரிய வெளிச்சமே படாத அளவுக்கு அடர்த்தியாக நிழல்தரும் மரங்கள் நிறைந் துள்ளன.

மருத்துவர் காந்திமதிநாதன் அவர்களின் கடுமையான உழைப்பின் மூலம் இந்த மருத்துவமனையில் இன்வெர்ட்டர்கள், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர், எப்.எம். ரேடியோ வசதி, நூலகம், பொழுதுபோக்கும் இடம், சதுரங்கம், கேரம் பலகை, இறகுப்பந்து விளையாட்டு அரங்கம், பொழுதுபோக்குவதற்கு டி.வி., நடைபயிற்சி பூங்கா, தியான மையம், யோகா அறை போன்றவை அமைந்து நீண்டகாலம் தங்கி காசநோய் சிகிச்சைக்காக மருத்துவம் செய்ய வேண்டிய நிலையில் உள்ளவர்கள் அனைவரும் கவலையின்றி மருத்துவம் செய்துகொள்வதற்குத் தேவையான வசதிகள் அனைத்தும் செய்யப்பட்டுள்ளன.

டாக்டர் காந்திமதிநாதன் அவர்களின் தீவிர கவனத்தின் விளைவாக இம்மருத்துவமனையில் சொற்பொழிவாளர்கள், மனோதத்துவ நிபுணர்கள் அழைத்துவரப்பட்டு நோயாளிகளுக்கு ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன. சிகிச்சைபெறும் ஒவ்வொரு நோயாளியின் பெயரையும் சொல்லி அழைக்கும் அளவுக்கு டாக்டர் காந்திமதி நாதன் நோயாளிகளின் மீது சிறப்பான கவனம் செலுத்தி வந்துள்ளார்.

டாக்டர் காந்திமதிநாதன் அவர்கள் இந்த மருத்துவமனையை தனது வீடு போலவும், நோயாளிகளை தங்கள் குடும்ப உறுப்பினர்கள் போலவும் நேசித்து பயனாளிகளின் நோய் விரைந்து குணமடைய காரணமாக இருந்துள்ளார். இந்த தோப்பூர் காசநோய் மருத்துவமனை டாக்டர் காந்திமதிநாதன் அவர்களின் அர்ப்பணிப்பு மிக்க பணிகளால் தற்போது அதிநவீன மருத்துவ வசதிகளுடன் தமிழகத்தின் தலைசிறந்த நெஞ்சக மருத்துவமனையாக உருவெடுத்து ஒருசோலை வனமாக காட்சியளிக்கிறது. தோப்பூர் அரசு மருத்துவமனைக்கு அனைத்து வகையிலும் பெருமைகளை உருவாக்கித் தந்துள்ள டாக்டர் காந்திமதிநாதன் அவர்கள் 30.6.2024 அன்று அரசுப் பணியிலிருந்து ஓய்வுபெற்றுள்ளார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், டாக்டர் காந்திமதிநாதன் அவர்களின் தியாகத் திருத்தொண்டுகளால் தோப்பூர் காசநோய் மருத்துவமனை சிறந்து விளங்குவது அறிந்து பெரிதும் மகிழ்ந்து டாக்டர் காந்திமதிநாதன் அவர்களுக்கு அழைப்பு விடுத்ததைத் தொடர்ந்து, முதலமைச்சர் அவர்களின் இல்லத்திற்கு டாக்டர் காந்திமதிநாதன் அவர்கள் தமது குடும்பத்தாருடன் வருகை தந்து முதலமைச்சர் அவர்களை நேற்று (1.7.2024) நேரில் சந்தித்தார்.

முதலமைச்சர் அவர்கள் மிகுந்த மகிழ்ச்சியோடு டாக்டர் காந்திமதிநாதன் அவர்களை வரவேற்று, தோப்பூர் காசநோய் மருத்துவமனையில் பணியாற்றியுள்ள காலத்தில் நோயாளிகளை நேசித்து ஆற்றியுள்ள மனிதநேயம் சிறக்கும் மகத்தான தொண்டுகளைப் போற்றி, பாராட்டி, வாழ்த்துத் தெரிவித்துள்ளார்கள்.

இந்நிகழ்வின் போது மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்த்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி ஆகியோர் உடனிருந்தனர்.

நேற்று (ஜூலை 1) உலக மருத்துவர் தினம் கடைப்பிடிக்கப்படுவதால் மருத்துவத் துறையில் சிறந்த தொண்டுகள் புரிந்துள்ள மருத்துவர்களுக்கான விருதுகள் வழங்கும் விழாவில் டாக்டர் காந்திமதி நாதன் அவர்களும் விருது வழங்கிச் சிறப்பிக்கப் படுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

---

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களில்

# ‘நான் முதல்வன்’ திட்டம் மூலம் 25,000 பாலிடெக்னிக் மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு!


## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவில் மகிழ்ச்சி!

**சென்னை, ஜூலை 2-**

**“நான் முதல்வன்” திட்டத்தின் மூலம் 25,000க்கும் மேற்பட்ட பாலிடெக்னிக் மாணவர்களுக்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களில் வேலைவாய்ப்பு கிடைத்துள்ளது குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் மகிழ்ச்சியை தெரிவித்துள்ளார்.**

இதுகுறித்து முதல்வரின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

மனதுக்கு இதமான இந்தச் செய்தியைப் பகிர்ந்துகொள்வதில் மிகுந்த மகிழ்ச்சி கொள்கிறேன்.


Over 25,000 polytechnic students get jobs through *Naan Mudhalvan* scheme

Ola Electric is recruiting polytechnic students for electric vehicle plants; T.N. Skill Development Corporation data show that salary packages range from ₹2 lakh per annum to ₹8 lakh per annum

“நான் முதல்வன்” திட்டத்தின் மூலமாக 25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாலிடெக்னிக் மாணவர்கள் வேலைவாய்ப்பு பெற்றிருக்கிறார்கள். இதனைக் கண்டு என் நெஞ்சம் பெருமிதத்தால் நிறைகிறது. நமது திராவிட மாடல் அரசு மெய்யாகவே நமது இளைஞர்களின் கனவுகளை நனவாக்கி வருகிறது.

இத்தகைய வாய்ப்புகளை இறுகப் பற்றிக்கொண்டு, தத்தமது துறைகளில் மென்மேலும் புதிய உயரங்களை அடையுங்கள்!

இவ்வாறு முதல்வர் அவர்கள் தமது பதிவில் தெரிவித்துள்ளார்.

---

## வலைதளங்களில் வலம் வருவது!

